ளுக்கு இடங்களைப் பூர்த்தி செய்யப் போகும்போது இடங்கள் ஏற்படும் என்ற நோக்கத்தில் அது கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் இவைகளைப் பூர்த்தி செய்யாமலிருக்கக்கூடாது என்று அவ்வப் போது அறிக்கைகளை அரசுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தகுதி யானவர்கள் கிடைக்கவில்லை என்பதுதான் முக்கியமான காரணம்.

திரு. கூவ. பாலசுந்தரம்: தலைவரவர்களே, நான் முதலிலே கேட்டது இந்த குரூப் ஒன் சர்வீஸில் அதிகமாக மதிப்பெண்கள் பெறுகின்றவர்கள் ஓப்பன் காம்பெட்டிஷனில் வருகிறார்களா என்பது. ரிட்டன் டெஸ்ட், இண்டர்வியூ முதலியவைகளில் பலர் அதிகமான மதிப்பெண்கள் பெற்று விடுகிறார்கள். அவர்களையும் இந்த ரிசர்வ் செய்திருக்கும் இடத்திற்குத் தேர்ந் தெடுத்தால் மதிப்பெண்கள் குறைவாக எடுத்தவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, மதிப்பெண்கள் அதிகமாகப் பெற்றவர்களை ஓப்பன் காம்பட்டிஷனில் சேர்த்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குரூப் ஒன் சர்வீஸுக்கு அநேகமாக குறைந்த இடங்களே ஏற்படுகின்றன. அதிலே கட்டாயம் 18 சதவிகிதம் என்று வந்து விடுகிறது. அதுகூட சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. 18 சதவிகிதம் கட்டாயம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று அரசு அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கிறார்கள்.

கும்முடிப்பூண்டி, பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அரிசனங்களுக்குக் கடன்கள்

*78 **வின—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ல் கும்முடிப்பூண்டி, பென்னலூர்ப்பேட்டை துணை வட்டங் களிலுள்ள அரிசன மக்களிடமிருந்து வட்டியில்லாக் கடன் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) அவைகளுள் ஏற்பளிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் விவரங் கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 21.

(இ) 19 விண்ணப்பங்கள் ஏற்பளிக்கப்பட்டன. 17 விண்ணப்பங்கள் 1972-73-ம் ஆண்டிலும் 2 விண்ணப்பங்கள் 1973-74-ம் ஆண்டிலும் ஏற்பளிக்கப்

பட்டன. இன்னொரு விண்ணப்பம் 28–3–1973 அன்று வரப்பெற்றதனால் 1973-74-ம் ஆண்டுக்கான விண்ணப்பங்களுடன் பரிசீலனையில் உள்ளது. மிகுதி யுள்ள ஒரு விண்ணப்பம் தகுதியில்லை என்பதால் ஏற்பளிக்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மேற்கண்ட இரு துணை வட்டங்களிலும் விண்ணப்பிக்கின்ற அரிசனங்கள் எல்லோருக்கும் அந்த ஆண்டிலேயே கடன் தொகை அளிப்பதற்கு அதிகமான நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விண்ணப்பிக்கின்ற எல்லோருக்குமே கடன் கொடுத்துவிட்டால், கொடுத்த கடன் திரும்பி வராது. ஆகவே, கடன் கொடுக்கின்ற பணத்தைத் திருப்பிச் செலுத்தும் தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் கொடுக்கப்படும். தகுதியுடையவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக ஆண்டு தோறும் தொகையை அதிகமாக ஒதுக்கி வருகிறோம்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இதுகாறும் வட்டி இல்லாமல் கடன் கொடுக்கப்பட்டது. இப்போது வங்கிகள் மூலமாகக் கடன் கொடுக்கும் போது 11 சதவிகிதம் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த வட்டியைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் இப்போது பதில் சொல்லிக்கொண்டு வருவது அரிசன நலத் துறை மூலமாகக கொடுக்கப் படுகின்ற நிதி உதவியைப் பற்றியது. வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுவது வேறு. வங்கிகள் மூலம், ஆங்காங்கு இருக்கின்ற வங்கிகளின் விதிமுறைகளின் படி கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அரிசன நலத் துறை மூலமாகக் கொடுப்பது வேறு.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, வட்டி இல்லாத கடன் என்று சொல்லியிருக்கும்போது, வங்கிகள் மூலமாகக் கொடுக்கும்போது ஏன் வட்டி வாங்கவேண்டும்? ஏற்கெனவே டி. டபிள்யூ. ஓ. மூலம் கொடுத்ததை இப்போது வங்கிகள் மூலம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறையில் ஆண்டு தோறும் 10 லட்சம், 11 லட்சம் ரூபாய் வட்டியில்லாமல் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் கேட்டதைப்போல நிறைய பேருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, சிலருக்கு வங்கிகள் மூலம் கடன் கொடுக்க உதவி செய்கிறோம்.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

1973 ஆகஸ்ட் 11]

வங்கிகள் மூலம் கொடுக்கும்போது, அவர்கள் எதற்காகக் கேட்கிறார்கள், எந்த மாதிரியான தொழில் தொடங்குவதற்குக் கேட்கிறார்கள், ஏற்கெனவே அந்தத் தொழிலில் அனுபவம் அவர்களுக்கு இருக்கிறதா, கொடுக்கின்ற கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தும் தகுதி இருக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்து, குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அப்படி இருந்தாலும் சில நேரங்களில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்கள் அந்தத் தொழிலைத் தொடங்காமலேயே இருந்துவிடுகிறார்கள். ஆகவே, 4, 5 பேர்களுக்கு சேர்த்துக் கொடுக்கலாமா என்ற ஒரு யோசனையும் இருக்கிறது. இந்த முறையிலே சிறு சிறு தொழில்கள் தொடங்க, வங்கிகள் மூலம் கடன் பெற அரசு உதவி செய்கிறது. ஆனால் எந்த வங்கியிலும் வட்டியில்லாமல் கடன் கொடுக்கமாட்டார்கள்.

Service Centres for fishing boats

* 79 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open service centres for fishing boats; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அ) & (இ): தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூரில் சறுக்குப் பாதையுடன் கூடிய தற்போதுள்ள பணி நிலையத்தில், மீன்பிடி விசைப் படகுகளுக்கு எல்லா வகையான பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளத் தேவையான யந்திரங்களுடன் அடிப்படைப் பணிக்கான வசதிகள் ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பணி நிலையத்தை 'ஏ' வகை பணி நிலையமாக மாற்றுவதற்கும், தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினத்தில், படகுகளுக்கான சிறு செப்பனிடு பணிகளை மேற்கொள்வதற்கான வசதிகளுடன் கூடிய 'பி' வகை பணி நிலையம் ஒன்றைப் புதிதாகத் தொடங்குவதற்குமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. என். டென்னிஸ்: தலைவாவர்களே, இத்தகையப் பணிமனை ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற ஏழு பணிமனைகளில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சலில் இருக்கிறது.